AstroVed

மாலை: 1

# சத்வித்யா

மலர்: 16

எஸ்பி -75, சிட்கோ தொழில்துறை எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600058.

மாதம் இரு முறை வெளிவரும்
ஏப்ரல் 16முதல் 30வரை

ஆன்மீக விஞ்ஞான இதழ்



## ஸ்ரீ ராம நவமி இராமாயண கதை சுருக்கம்

★ ஸ்ரீ ஹனுமன் எந்திரம் ★ ஏப்ரல் 16 – 30 ராசி பலன்

★ வசந்த நவராத்திரி ★ மூலிகை ரகசியம்

அனைத்து இதழ்களையும் AstroVed.com இணையதளத்தில்
இலவசமாக டவுன்லோடு செய்து பயன் பெறலாம்
மேலும் விபரங்களுக்கு போன்: 88702 88701, www.astroved.com

AstroVed

# சத்வித்யா



போன ஜென்மத்தில் நாம் என்ன செய்து கொண்டிருந்தோம் என்ன நினைத்துக் கொண்டிருந்தோம் என்பதை அறிவதும் அறிவியல் தான்! நினைவுத் திறன் அதிகமாக பரப்ப பட்டதாக இருந்தால் தான் நமது முற்பிறவி பற்றி அறிய முடியும். புத்தர், கடவுளே இல்லை என்றவர் ஆனால் முற்பிறவி என்பது உண்டு என நம்பினார். ஒரு விளக்கை ஏற்றினால், அதைக்கொண்டு அடுத்தது அதிலிருந்து இன்னொன்று என பல விளக்குகளை தொடர்ச்சியாக ஏற்ற முடியும். இப்படித்தான் கடந்து போன பிறவியின் நினைவுகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆகையால் தான் பல பிரச்சனைகள் நம்மை தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. அடுத்து ஏற்ற முடியாமல் ஒரு விளக்கு அனைவதைப் போல் நமது மூளை முற்பிறவி நினைவுகளை எப்போது மறந்து, புதிய சிந்தனை பிறக்கிறதோ அப்போது தான் நமது பிரச்சனைகள் மறந்து புதிய வாழ்கை, புதிய பாதை பிறக்கும்.

Dr. Baskaran Pillai

இனிய சத்வித்யா வாசகர்களே! சித்திரை பிறந்து விட்டது! வெயிலின் தாக்கம் மட்டுமே மேலோங்கி இருக்கக் கூடிய இந்த கோடையில் தற்போது கொரோனா வைரஸ்ஸின் இரண்டாவது அலையின் தாக்கமும் இணைந்து கொண்டு, நிம்மதியற்ற நிலை உண்டாகி விடுமோ என்னும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. அரசாங்கம் அறிவுறுத்துகின்ற, முகக் கவசம், தனி மனித இடைவெளி ஆகியவற்றை கடைபிடித்து, வைரஸ் நம்மை நெருங்காமல் பாதுகாத்துக் கொள்வோம்.

இறை நம்பிக்கையும் அசைக்க முடியாத ஆன்மீக சக்தியும் நம்மோடு இருந்தாலும் பொதுவான விதிமுறைகளை கடைபிடித்து நமக்கும் சமூகத்துக்கும் எவ்வித இழப்பும் ஏற்படாத வண்ணம் கவனமுடன் செயல்படுவோம். இன்னொரு ஊரடங்கை நம்மால் தாள முடியுமா? என சிந்தித்து, அந்நிலை ஏற்படா வண்ணம் நம்மை நாமே பாதுகாத்துக் கொள்வோம்.



அன்புடன்
(அச்சிட்டு வெளியிடுவோர்)
ஆஸ்ட்ரோவேட்.காம்

# வாக்கு வன்மை

'அந்த பகுதியிலேயே மிகப் பெரிய சிவன் கோயில் அது! உள்ளே இருக்கும் சிவனை வைத்தியநாதன் என எல்லோரும் கொண்டாடி போற்றி வந்தனர். அம்பிகை அறம்வளர்த்த நாயகி என்னும் நாமத்தோடு அருளாட்சி செய்து வந்தாள். இல்லாதோர் பசியாற, நல்லோர் சிலர் தினமும் அன்னதானம் செய்து வந்தனர். ஆலயம் வருகின்ற பக்தர்கள் தவிர, ஏதும் இல்லாத ஏழைகள் பலரும் இந்த ஒருவேளை அன்னதானத்தினை ஆண்டவனின் அருட்பிரசாதமாக உண்டு, உயிரையும் உடலையும் வளர்த்து வந்தனர்.

இந்த ஆலயத்தில் அர்ச்சகர்கள் இடுகிற கட்டளைகளை ஏற்று, பல வேலைகள் செய்வதோடு, அதிகாலையிலேயே கோயிலை கூட்டிப் பெருக்குவது, நாள் முழுவதும் குப்பைகள் சேராமல் ஆலயத்தை சுத்தமாக வைத்திருப்பது என்று ஆலயப்பணியே ஆண்டவன் பணி என அனுதினமும் உழைத்து வருபவன் ஏகாம்பரம்! இவனை எச்சிலை ஏகாம்பரம் என்றுதான் அனைவரும் அடையாளம் காட்டுவார்கள். ஆலயம் தூய்மை பெற எச்சிலை எடுப்பதால் அவனுக்கு இந்தப் பெயரே நிலைத்து விட்டது!



ஏகாம்பரம் யார்? எங்கிருந்து வந்தான் என்பது யாருக்குமே தெரியாது. சுமார் பத்து வயதில் இந்த ஆலய வாசலில் பிச்சையெடுக்கும் சிறுவனாக வந்தான். நாளடைவில் இறைப்பணி செய்வதில் ஆர்வம் கொண்ட அவனை, அர்ச்சகர்கள் சிலபல வேலைகளை ஏவினர்.

அனாதையான ஏகாம்பரம், இப்படித்தான் பல ஆண்டுகளாக இந்த கோயிலின் ஏவலாளாக இருந்து விட்டான்! ஒரு வேளை அன்னதானமும் ஆலய பிரசாதமும் தான் உணவு! ஆலயே வீடு! ஆலயத்தில் உறையும் அம்மையப்பனையே தன் பெற்றோராக நினைத்து காலத்தை நகர்த்தி வந்தான்.

காலையில் சுவாமி சன்னதியில் வணங்கி, தன் வேலைகளைத் தொடங்குவான்! அதன்பின் நேரம் கிடைக்கும் போதெல்லாம் அறம் வளர்த்த நாயகியின் சன்னதி முன் அமர்ந்து, அந்த தெய்வத்தாயின் முகத்தையே உற்றுப் பார்த்தப்படி, கண்ணில் நீர் கசிய அமர்த்திருப்பான். தன் அன்னை யார் என்றே தெரியாதவன், இதுவரை தாயின் முகத்தையே பார்க்காதவன், இந்த அறம் வளர்த்த நாயகியையே தன் தாயாய் எண்ணி உள்ளத்தால் பூஜித்து வந்தான்!

ஒரு நாள் மதிய நேரம்! அன்னதானம் சாப்பிட்டு முடித்தார்கள், பக்தர்கள்! இலையை எல்லாம் எடுத்துப் போட்டுவிட்டு இடத்தை சுத்தம் செய்து கொண்டிருந்தான், ஏகாம்பரம்!

அன்னதானத்தில் சாப்பிட்ட பெரியவர் ஒருவர், இவனையே பார்த்தப்படி ஓரமாக நின்று கொண்டிருந்தார். தன் வேலைகளை முடித்த ஏகாம்பரம் பெரியவரிடம் வந்து, "அய்யா" பார்த்தா ரொம்ப வசதியானவர்

மாதிரி தெரியுது! அன்னதானமும் சாப்பிட்டிங்க! இங்க ஏன் நிக்கிறிங்க? உங்க பிரச்சனை எதுவா இருந்தாலும் உள்ள இருக்கற என் தாய்கிட்ட சொல்லிட்டு, போய்கிட்டே இருங்க! அவ தீர்த்து வைப்பா," என்றான்.



பெரியவர், "தம்பி , ஒரு நாள் அன்னதானத்துக்கு எவ்வளவு பணம் கட்டணும்?" என்றார் "அதிகமில்ல, ரெண்டாயிரம் தாங்க!" என்றான் ஏகாம்பரம்! பணத்த எங்க கட்டணும்?" என்றார். "வாங்க, நான் கூட்டிக்கிட்டுப் போறேன்", என ஏகாம்பரம் நடக்க, பெரியவர் உடன் நடந்தார். ஆலய கணக்கரிடம் சென்று "அன்னதானத்துக்கு அய்யா பணம் கட்டணுமாம்," என்றான். அவர் ரசீது நோட்டை எடுத்தார், பெரியவர், "இப்போதைக்கு ஒரு பத்து நாளைக்கு என் மகள் பேர்ல அன்னதானம் போடுங்க! இந்தாங்க" என கத்தையாக நூறு ருபாய் நோட்டுக்கட்டினை எடுத்துக் கொடுக்க, கணக்குப் பிள்ளை ஆச்சர்யமாய் அவரைப் பார்க்க, ஏகாம்பரம் பணத்தைப் பார்த்து மலைத்தப்படி வாய் பிளந்தான்.
பணத்தைப் பெற்றுக்கொண்ட கணக்குப்பிள்ளை ரசீது கொடுத்தார். ரசீதை வாங்கிய பெரியவர், அம்மன் சன்னதிக்கு முன்னால் வந்து ஓரமாக நின்றார்.
வியப்புடன் அவரைப் பார்த்தவாறே அருகில் வந்தான் ஏகாம்பரம்! 'அய்யா'.. நீங்க' ரொம்ப வசதியானவரா?... பொண்ணு பேர்ல அன்னதானம் செய்ய சொன்னிங்களே'. உங்க மகளுக்கு உடம்புக்கு ஏதாவது'? தயங்கித் தயங்கி கேட்டான்! 'அதெல்லாம் ஒன்னுமில்லப்பா'. நான் ஜமீன் பரம்பரைய சேர்ந்தவன்! பணம், பேர், புகழ் எதுக்கும் பஞ்சமில்ல, மகளையும் நல்லா படிக்க வச்சேன்! அவளுக்கு இப்ப முப்பது வயசு தாண்டிடுச்சு! கல்யாணத்துக்கு காலம் கூடி வரல! அதுவே எனக்கு வேதனையா இருக்குது! அதான் இந்த கோயில்ல வேண்டிக்க வந்தேன்", என்றார்.
ஏகாம்பரம் சந்தோஷமாக, நீங்க ஒன்னும் கவலப்படாதிங்க, இந்த ஊர்ல இருந்து நீங்க பஸ் ஏர்றதுக்குள்ள மாப்பிளை அமைஞ்சிடும்! எங்க அம்மா கண்டிப்பா நிறைவேத்துவா, என்றான்.
பெரியவர், நிம்மதி அடைந்தவராய், "சரி பார்ப்போம் வரேம்பா", என மெல்ல நடந்தார்.
சுமார் ஒரு மணி நேரம் கழித்து"

இன்னொரு முதியவருடன் மகிழ்ச்சியாக வந்தார் அந்த பெரியவர்! "தம்பி, இங்க வாப்பா! ஏகாம்பரத்தை பொண் சிரிப்போடு அழைத்தார். இதைப் பார்த கணக்குப் பிள்ளையும் பெரியவரை நோக்கி வர, பணிவுடன் பெரியவரை நெருங்கினான், ஏகாம்பரம்!
"தம்பி, கடவுள் மனித உருவத்துல வருவார்னு சொல்லுவாங்க! நீ சொன்ன மாதிரி நான் பஸ் ஏற போகும் போது என் பால்ய சினேகிதன பார்த்தேன்! இவனுக்கு நான் செஞ்ச உதவிகளுக்கு கைம்மாறு செய்ய என்னைத்தேடி அலைஞ்சவன் பஸ் ஸ்டாண்டுல என்னப் பார்த்துட்டான்! என் நெலம தெரிஞ்சு, இவன்

பையங்கிட்ட போன்ல பேசினான். அவனும் எம் மகள கட்டிக்க சம்மதம்னு சொல்லிட்டான்! நாளைக்கே பெண் பார்க்க வர்றாங்க!” என்றவர், கணக்குப் பிள்ளையிடம், “இந்த தம்பி தெய்வத்தோட மகன், சொன்னது அப்படியே நடந்துபோச்சு!” என பூரிப்போடு சொன்னவர், நூறு ரூபாய் கட்டு ஒன்றை எடுத்து ஏகாம்பரத்திடம் நீட்ட, கூச்சத்துடன் நெளிந்த ஏகாம்பரம், “எனக்கு எதுக்கய்யா இது? அதான் எனக்கு என் அப்பனும் அம்மாவும் படியளக்கறாங்களே! பணத்த அவர்கிட்ட கொடுங்க, அன்னதானத்துக்கு உதவும்”, என்றவுடன் பணத்தை கணக்கப் பிள்ளையிடம் கொடுத்தார்! மன மகிழ்ச்சியுடன் அங்கிருந்து சென்றனர், பெரியவர்கள் இருவரும். ஏகாம்பரத்தை ஆச்சர்யமாக பார்த்தனர் கோயிலில் இருந்தோர்!

“இன்னைக்கு நான் போற இன்டர்வியூல பாஸ் ஆகி வேல கிடைக்கணும் தாயே!” என இளைஞன் ஒருவன் வேண்ட, அம்மனைப் பார்த்தவாறு அமர்ந்திருந்த ஏகாம்பரம், “இதெல்லாம் உனக்கு தோது படாது! இன்னும் நாலு நாள்ல நல்ல வேல அமையும்!” எனக் கூறி எழுந்து செல்ல, அந்த இளைஞன் வெறுப்புடன் சென்றான்.



நடுத்தர வயதுக்காரர் ஒருவர், “இன்னைக்கு என் வழக்கில் தீர்ப்பு! எனக்கு சாதகமா அமையனும் அம்மா!” என வணங்க, “பாவம் பண்ணவங்களுக்கு அம்மா தயவு காட்டவே மாட்டா!” என்றபடி ஏகாம்பரம் சென்றான்.

இதில் ஆச்சர்யம் என்ன வென்றால், ஏகாம்பரம் சொன்னதெல்லாம் அப்படியே நடந்தது! கோயில் ஊழியர்கள், அர்ச்சகர்கள் மட்டுமின்றி பக்தர்கள் பலரும் ஏகாம்பரத்தை பார்த்த பார்வை மாறியது!

இதையெல்லாம் சொன்னால், “அட, எனக்கு என்னங்க தெரியும்? நான் ஏதோ உளறினேன்,” என்று சாதாரணமாக சொன்னான் ஏகாம்பரம்!

ஒரு நாள்’..

அம்பாள் உபாசகரும் அருள் சக்தி கடலுமான ஜகதீஸ்வரி அடியார் ஆலயத்திற்கு வந்தார். அவரை வரவேற்க சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அவர் உள்ளே வரும் போது பாதையில் பூக்கள் தூவும் படி ஏகாம்பரத்திற்கு உத்தரவு! தூவினான்! அடியார் அவனையே பார்த்தார்!

கோயில் மண்டபத்தில் சொற்பொழிவாற்றினார். கூட்டம் மெய் மறந்து கேட்டது! இறுதியில் அவரது காலில் விழுந்து ஆசி பெற்று எல்லோரும் குங்கும பிரசாதம் பெற்றுச் சென்றனர்.

நிகழ்ச்சிகள் எல்லாம் முடிந்து, அம்மன் சன்னதியில் நின்று கண்களை மூடி தியானித்த அடியார் கண் திறந்து நாற் புறமும் பார்த்தார். குப்பைகளை சேகரித்துக் கொண்டிருந்த ஏகாம்பரத்தைக் காட்டி, அவரை அழையுங்கள், என்றார். எல்லோருக்கும் ஆச்சர்யம்! இவ்வளவு பேர் சுற்றி நிற்க எச்சில் இலை

ஏகாம்பரத்தை அவர் என்று சொல்லி அழைக்கச் சொன்னதை நினைத்து, எல்லோருமே திகைப்புடன் இருந்தனர். ஏகாம்பரத்தை அழைத்து விபரம் சொல்ல, அடியாரின் முன்னால் கைகட்டி, வாய் பொத்தி பணிவுடன் நின்றான் ஏகாம்பரம்!

எல்லோரையும் பார்த்தவர், ஏகாம்பரத்தை பார்த்து, சிறு முறுவலுடன் சொன்னார். "இவர் ஓர் தெய்வப் பிறவி! பூர்வ ஜென்மத்தில் சித்தராய் ஜனனம் செய்தவர்! இவரது தந்தை செய்த பாவம் இப்பிறவியில் இவரை ஆலயத்தை தூய்மை செய்யவும் எச்சில் இலை எடுக்கவும் விதித்துள்ளது," என்றவர், "உங்கள் கனவில் அம்பாள் வந்தாரா?" என்று கேட்டார், "அம்பாள் வரலைங்க, ஒரு அம்மா வந்தாங்க! வாய திறக்க சொல்லி குங்குமத்த கொட்டினாங்க! நாங்க்கூட ரத்தம்னு பயந்துட்டேன், நல்லவேள, முழிச்சுப் பார்த்த அதெல்லாம் ஒன்னும் இல்லிங்க!" என்றான் பணிவோடு!

இதழ் விரித்து மெல்ல புன்னகை செய்த அடியார், "பூர்வ ஜென்ம புண்ணியத்தால் உன் அன்னை செய்த அருந்தவத்தால், அம்பாள் உனக்கு வாக்கு வன்மையை அருளிச் செய்திருக்கிறாள்! உன் புகழ் ஓங்கும்! ஆனாலும் எச்சில் இலை என்ற பட்டம் மாறாது, மறையாது! இருந்தாலும் இப்பிறவியில் நீ சித்தன் என்பதை உலகறியும்," என்றார். மெய் சிலிர்த்தான் ஏகாம்பரம்! சுற்றிலும் இருந்தோர் ஏகாம்பரத்தை வணங்க," என்னங்க நீங்க? என்றபடி துணியை எடுத்து, சன்னதியின் முன்பாக தரையை துடைத்து சுத்தம் செய்யத் தொடங்கினான்.

ஆலய நிர்வாகி ஒருவர் சொன்னது எல்லோர் காதிலும் விழுந்தது, "எவ்ளோ பெரிய மகானா இருந்தாலும் ஜாதகம் சரியா இருந்தால் தான் திருவோடு தங்கத்துல இருந்தாலும் அது பிச்சையெடுக்கத் தானே உதவுது?"

விதி, எச்சில் இலை எடுக்க வைத்தாலும் மகான்களின் மாண்பு மறையுமா?

~ ரா. பன்னீர்செல்வம்




VOPEC

TURMERIC & BLACK PEPPER

HI-HEALTH FORMULA

Navel Chakra & Detoxifier

Hi –health formula can be a solution for everyday health issues
Turmeric fights with free radicals & protects brain,
heart and liver cells from ageing process

Call: 95001 84108

## சுசீந்திரம்

# அருள்மிகு தாணு மாலயன் சுவாமி திருக்கோயில்

வட தமிழகத்தில் எண்ணற்ற சைவ, வைணவக் கோயில்கள் நம் பண்பாட்டை, பாரம்பரியத்தை ஆன்மீக பெரு நெறியை எவ்வாறு பெருஞ்சிறப்புடன் வளர்க்கிறதோ அதே போன்று தென் தமிழகத்திலும் திருக்கோயில்களுக்கு பஞ்சமில்லை. வெளி நாட்டிலிருந்து வருகின்ற சுற்றுலா குழுவினர் அதிசயமுற்று பார்ப்பது மதுரை அருள்மிகு மீனாட்சி அம்மன் ஆலயம் இராமேஸ்வரம் ஸ்ரீ இராமநாத ஈஸ்வரர் திருக்கோயில் கன்னியாகுமரி அம்மன் கோயில். இக் கோயில்களின் கம்பீரமும், கவின்மிகு பேரழகும் வார்த்தைகளால் விளக்கிட இயலாது. அவ்வளவு ஆன்மீகச் சிறப்புகள் கொண்டது.




நாடும் நகரமும் நற்றிருக்கோயிலும் தேடி திரிந்து சிவபெருமானென்று பாடுமின் பாடி பணியின் பணிந்த பின் கூடிய நெஞ்சத்துக் கோயிலாகக் கொள்வேனே என்பது திருமூலர் அருளிய தெய்வ வாக்கு. திருநெல்வேலி வீரம் செறிந்த மண் மட்டுமல்ல அறம் செறிந்த ஆன்மீக மண். இப்புனித மண்ணில் பிறந்தவர்கள் தென் பாண்டிச் சீமையில் பிறந்ததற்காக பெருமிதம் அடைவதுண்டு. இங்கு ஈசன் அருள் நலம் புரிவதை தரிசிக்கலாம்.

சங்கர நாராயணராக அருட்காட்சி தரும் சங்கரன் கோயில் அம்பிகையின் திருநாமம் ஸ்ரீ கோமதி அம்பிகை.

திருநெல்வேலி நெல்லைச் சீமை என்றால் திருநெல்வேலியிலிருந்து தெற்கே, நாஞ்சில் நாடு என்ற பெருஞ்சிறப்புமிக்க நாகர் கோவில். கன்னியாகுமரி மாவட்டம். வள்ளியூர் வரவேற்பதும். பசுமை படர்ந்த விண் முட்டும் மலைத் தொடர்கள் மரகதப் பட்டு உடுத்திய நில மங்கையின் பேரெழிலை கண்டு மகிழலாம். அழகான தாமரைப் பூக்கள் கொண்ட தடாகங்கள் குயிலினம் கூவும்! மயிலினம் மகிழ்வு ஊட்ட வாழைத் தோப்புகளும், வாசமிகு மலர்கள் கொண்ட மரம் செடி கொடிகளும், அணி

வைரங்களாக அருவிகளும். ஆறுகளும் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்து அளிப்பன. கன்னியாகுமரி மாவட்டமே அழகின் அடையாளம் ஆன்மீக பூமி! பசுமை தவழ் மேன்மை மிகு நகரம். நாகர் கோயிலிருந்து கன்னியாகுமரி செல்லும் பாதையில் சுசீந்திரம் என்ற அழகிய ஊர் அமைந்துள்ளது. சுவாமியின் பெயர் ஸ்ரீ தாணு மாலயன் சுவாமி ஈசனே பிரம்மாவாக, விஷ்ணுவாகவும் சிவனுமாகவும் எழுந்தருளும் மும்மூர்த்திகளும் ஓர் மூர்த்தியாக அருட்காட்சி அளிக்கும் அதிசயத்தை வேறு எங்கும் காண இயலாது இந்த அற்புதமான திருக்கோயிலில் உள்ள தூண்கள் மிகவும் விசேஷமானவை. இத்தூண்களை தட்டினால் இனிய ஓசை எழுவதை கேட்கலாம்.

இத்தலத்தில் எழுந்தருளிய ஈசன் நாத மயமாக எழுந்தருளி உள்ளதை தரிசிக்கலாம். எழில்மிகு கலை வேலைப்பாடுகள் அதிகம் உள்ள கோயில் இது எனலாம். அனைத்து தெய்வங்களுக்கும் அழகான சந்நிதிகள் அமைந்துள்ளது.



சுற்றுப் பிரகாரத்தில் ஸ்ரீ ஆஞ்சநேயர் சுவாமியின் மிக உயரிய கம்பீரமான விஸ்வரூப சிலையை காணலாம்.

மிகப் பெரிய அளவில் துளசி மாலை, பூமாலை, வெற்றிலை மாலை மற்றும் மிகப் பெரிய வடை மாலை சாத்துவதும், வெண்ணெய் சாத்துவதும் மிகவும் விசேஷம். நவக்கோள்கள் சந்நிதியில் மேல்புறம் ஒன்பது கிரகங்களின் புடைப்பு சிற்பங்கள் செதுக்கப் பட்டு உள்ளது. இது போன்ற அமைப்பு வேறு எங்கும் காண இயலாது.

இறைவன் அருளால் முற்காலத்தில் சுப்பையா பிள்ளை என்பவர் மிருதங்க கலைஞராக வாழ்ந்து வந்தார்.

வாழைக்காய் தார் நிறைந்த ஒரு பெரிய தாரை தன் மிருதங்க ஒலியால் பழுக்க வைத்த அற்புத காட்சியை ஓவியங்களாக தீட்டி வைத்துள்ளனர்.

கம்பீரமான இராஜ கோபுரம், அழகான பிரகாரங்கள் திருக்கோயில் முன்பு திருக்குளம் மிக சிறப்பாக அமைந்துள்ளது. சுசீந்திரம் திருக்கோயில் முகப்பு பேரழகு வாய்ந்தது. சுசீந்திர தேரோட்டம் மிகவும் விஷேஷம். திருமணத் தடைகள் நீக்கும் பரிகாரத்தலம் என்றும் கூறுவர் என்பது கூடுதல் செய்தி. மனம் மொழி மெய் ஒன்றுபட வழிபட்டால் தடைப்பட்ட எந்த காரியமும் இனிதே நிறைவேறும் என்பது கூடுதல் செய்தி.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

# ஸ்ரீ ஹனுமன் எந்திரம்

அனைத்து பிரச்சனைகள் மற்றும் வழக்குகளிலிருந்து விடுபட்டு சகல சௌபாக்கியம் கிடைக்க ஸ்ரீ ஹனுமன் எந்திரம்

ஸ்ரீ ராமனின் சேவகனாகவும் வாயு புத்திரனாக விளங்குபவர் ஸ்ரீ ஹனுமன் ஆவார். ஸ்ரீ ராமனிடம் கொண்டுள்ள பக்திக்கு தன்னை மிஞ்ச வேறு ஆளே இல்லை என வாழ்ந்து காட்டியவர் ஸ்ரீ ஹனுமன் ஆவார். ராமர் பட்டாபிசேகத்தின் போது ஸ்ரீ ராமபிரானின் காலடியில் வீற்றிருந்த ஹனுமனை பார்த்து என் மீது நீ கொண்டிருக்கும் அன்பை எவ்வாறு விவரிப்பேன். எனக்கு உதவி செய்வதில் உனக்கு இணையாக யாரையும் பார்க்க இயலாது. என் மீது உனக்கு உள்ள அன்பை எதாலும் அளக்க முடியாது. கைமாறு பார்க்காமல் எனக்கு உதவக்கூடியவர் இந்த உலகத்தில் எவறும் இல்லை என அனுமனை கட்டி அணைத்துக் கொண்டார். நட்பு, பாசம் மற்றும் நம்பிக்கைக்கு பாத்திரமான ஸ்ரீ ஹனுமனின் எந்திரத்தை பூஜை அறையில் வைத்து தினமும் காலை குளித்துமுடித்துவிட்டு, செந்தூர திலகமிட்டு, அரளி மலர் கொண்டு பூஜித்து, தீப தூப ஆராதனை காட்டி கீழே கொடுக்கப்பட்டிருக்கும் மந்திரத்தை 108 முறை கூறிவருவதால் அனைத்து விதமான பிரச்சனைகளிலிருந்தும் விடுபடலாம். மேலும் துஸ்ட சக்தி, எதிர்மறை ஆற்றல்களிலிருந்தும் தன்னை காத்துக்கொள்ளலாம். திடீர் விபத்துக்கள், ஆபத்துக்கள் ஏற்படாமல் நம்மை தற்காத்துக் கொள்ளலாம்.

**ஹனுமனின் பீஜ மந்திரம்:**

ஆவ்ம் ஐம் ப்ரீம் ஹனுமதே
ஸ்ரீ ராமா தூதாய நமஹ

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்



# ஸ்ரீ ராம நவமி ஸ்பெஷல்

மனிதன் உலகில் எப்படி வாழ வேண்டும் என்பதை உணர்த்துவது வேதங்கள். அதன்படி வாழ்வது சாத்தியம் அல்ல என்று மக்கள் நினைத்த தருணத்தில் மக்களுள் ஒருவராக இருந்து வேதங்களின் சாரத்தை, தினசரி வாழ்க்கையில் வாழ்ந்து, உலகத்துக்கு உணர்த்திய அவதாரமே ஸ்ரீ ராமாவதாரம்.

ஒரு வில், ஒரு சொல், ஒரு இல் என உலகிற்கு வாழ்ந்து காட்டிய ராமர் பங்குனி மாதம் புனர்பூச நட்சத்திரத்தில், கிருஷ்ணபட்ச நவமி திதியில் தான் ராம அவதாரம் நிகழ்ந்தது. ராமர் அவதரித்த நாளாண ராம நவமியாக கொண்டாடுகிறோம். இந்த நன்னாளில் ராமனின் பெருமைகளை அறிந்து கொள்வோம்.

தர்மம் அழிந்து, அதர்மம் தலை எடுக்கும் போதெல்லாம் மண்ணுலகையும், மக்களையும் காக்க மகாவிஷ்ணு அவதாரங்கள் எடுத்தார் என்கின்றன புராணங்கள்.



இதில் ஏழாவதாக அவதாரமான ராம அவதாரம் மனித அவதாரமாக இருந்ததால் சிறப்பு வாய்ந்ததாக கருதப் படுகிறது. மத்ஸ்ய, கூர்ம, வராக, நரசிம்ஹ, வாமன, மற்றும் பரசுராம அவதாரம் முதல் ஆறு அவதாரங்கள்.

இந்த ராமாவதாரத்தில் மனிதர்கள் படும் அனைத்து இன்னல்களையும் இறைவனும் அனுபவித்து அதன் மூலம் மக்களுக்கு பாடம் புகட்டியிருக்கிறார்.

ரகு குலத்தில் தசரத சக்கரவர்த்திக்கு மகனாக உதித்த ராமன், சீதையை மணந்து ஏகபத்தினி விரதனாக இருந்தார். தந்தை செய்து கொடுத்த சத்தியத்தைக் காப்பாற்றினார். அரக்கன் ராவணனை சம்ஹாரம் செய்து மக்களை காத்தார். இவரது சிறப்புகளை விளக்கும் ராமாயணம் நமது இதிகாசங்களில் ஒன்றாக போற்றப்படுகிறது. இதில் ராமாவதாரத்தைப் பற்றியும், அவர் செய்த சாதனைகளைப் பற்றியும் தெளிவாக எடுத்துக் கூறுகிறது..

ஸ்ரீராமர் விசுவாமித்திர முனிவருடன் இருந்த போதும், 14 ஆண்டுகள் கானக வாழ்க்கை மேற்கொண்டிருந்த போது தாகத்திற்கு நீர் மோரும் பானகமும் பருகினார் என்பதை நினைவுபடுத்தும்

விதமாகவே அவை இரண்டும் ஸ்ரீராமபிரானுக்கு நிவேதனம் செய்யப்பட்டு பக்தர்களுக்கு வழங்கப் படுகிறது. வைஷ்ணவ ஆலயங்களில் ஸ்ரீராமருக்கு பட்டாபிஷேக விழா சிறப்பாக நடைபெறும்.

ராம நாமமானது அஷ்டாட்சரமான "ஓம் நமோ நாராயணாய" என்பதில் உள்ள "ரா" என்ற எழுத்தையும், பஞ்சாட்சரமான "நமச்சிவாய" என்ற எழுத்தில் "ம" என்ற எழுத்தையும் சேர்த்து "ராம" என்றானது.

சாஸ்திரம் படித்திருக்காவிட்டாலும் வேதங்கள் தெரியாமல் போனாலும், மந்திர உபதேசங்கள் அறிந்திருக்காவிட்டாலும், 'ராம' நாமத்தை பாராயணம் செய்தாலே அவர்களுக்கு சகல சௌபாக்கியங்களும், சௌகரியங்களும் அடைந்து சந்தோஷமாகவும், நிம்மதியாகவும் வாழ்ந்திடுவார் என்பது உண்மை. அந்த ராம நாமம் நமக்கு சுபிட்சம் தரும் என்பது வேதவாக்கு.

"இராமனை நினைவு கொள்வாய் மனமே-அந்த

கோசலை மகனை துதி செய்வாய் தினமே!

சித்திரை நவமியில் புனர்பூசத்தில் பிறந்து

இத்தரை மாந்தர் வாழ்வில் உய்யவே அவதரித்த அந்த......"

இவ்வளவு எளிமையான, இனிமையான லகுவான ராமமந்திரம் வாழ்வைக் கடைத்தேற்ற இருக்கையில் நாம் அதை அனுசரித்துக் கடைப் பிடித்து வாழ்வில் வெற்றியடைவோமாக.

ஸ்ரீ ராம நாமத்தின் மகிமை பற்றி கூற வேண்டும் என்றால் பல ஆயிரம் கதைகள் கூறலாம். ஆனாலும், ஒரு சிறு கதையை உங்களுக்கு கூறுகிறேன்.

ஒரு ஊரிலே ஒரு வயதான ஏழை பிரம்மச்சாரி இருந்தான், அவனுக்கு கண்கள் குருடு ஆனால் ராம பக்தன். அவனுடைய பக்தியினைக் கண்டு இரங்கி ராமபிரான் காட்சியளித்தான். 'ஒரே கேள்வியைக் கேட்டு வரம் பெற்றுக் கொள். கண்டிப்பாக மறு கேள்வி கேட்கக் கூடாது என்றான்' ராமபிரான். கிழவனும் சரியென்று ஒப்புக்கொண்டு ஒரே ஒரு வரம் கேட்டார்.

'ஏழு அடுக்கு மாளிகையில் தங்க கரண்டியால் என் பேரன் பாலை குடிப்பதை என் கண்களால் பார்க்க வேண்டும்.' என்று ஒரே ஒரு வரம் கேட்டார். வரம் கொடுத்து ராமபிரான் சென்று விட்டான்.

வீடு இல்லாதவனுக்கு வந்து விட்டது மாளிகை. பேரன் பிறக்க வேண்டுமானால், கல்யாணம் முடிக்க

வேண்டும் அல்லவா? கிழவனுக்கு யார் பெண் கொடுப்பார்கள்? வர பலத்தால் இளமையும் வந்துவிட்டது. பால் குடிக்கும் கரண்டியே தங்கமானால் எவ்வளவு செல்வம் வரவேண்டும்? அவ்வளவு செல்வமும் வந்துவிட்டது. பேரனைப் பார்ப்பதற்குக் கண்கள் வேண்டுமல்லாவா? கண்களும் வந்து விட்டன.

கிழவன் ராம நாம ஜெபத்தின் மகிமையால் தெளிவான ஒரே கேள்வி கேட்டதின் பயனால், மாளிகை, இளமை, செல்வம், கண்கள், இல்லற வாழ்வு இத்தனையும் பெற்றான். பக்தி நெறியிலீடுபட்டால் தெளிவான கேள்விகள் உதயமாகி, அறிவு தெளிவடையும்.

பகவானின் ஆயிரம் நாமங்களுக்கு இணையானது ராம நாமம். ஸ்ரீராம நவமி அன்று ராம நாமம் சொல்வதும், ராம நாமம் எழுதுவதும் நற்பலனைத் தரும். பகவான் நாமம் இதயத்தைத் தூய்மைப்படுத்தி உலக ஆசைகள் என்னும் தீயை அணைக்கிறது. ஞானத்தைத் தூண்டுகிறது. அறியாமை, காமம், தீய இயல்புகளைச் சுட்டுப் பொசுக்குகிறது. உணர்ந்தோ உணராமலோ உச்சரித்தாலே பகவான் அருள் கிட்டும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

ராம நாமத்தை சொல்லி கொண்டாடுவோம். தசரத மைந்தனின் அருள் பெறுவோம்....

"ஸ்ரீ ராம ராம ராமேதி ரமே ராமே மனோரமே ஸஹஸ்ரநாம தத்துல்யம் ராமநாம வரானனே"

ஜெய் ஸ்ரீ ராம்...

~ தொகுத்து வழங்கியவர்

ஜானகி



உங்கள் இல்லத்தில் வைதீக/ஆகம முறைப்படி யாகங்கள் மற்றும் சத்ய நாராயண பூஜை போன்ற அனைத்து பூஜைகளும் செய்து தர அணுகவும்

www.priestservices.com

போன்: 88702 88701

# வசந்த நவராத்திரி

கோடை காலம் எனப்படும் இந்த வசந்த காலத்தில் கொண்டாடப்படும் நவராத்திரியை தான் நாம் வசந்த நவராத்திரி என்கிறோம். ஆனால் பொதுவாக நவராத்திரி என்றாலே புரட்டாசி மாதத்தில் கொண்டாட்டத்தோடு நடைபெறும் நவராத்திரி தான் நினைவில் நிற்கும்.

இந்த வசந்த நவராத்திரியில் பல சிறப்புக்கள் உண்டு

கோடையின் வெப்பத்திற்கு இதமாக ஆலயங்களில் இருக்கின்ற வசந்த மண்டபத்தில் இறைவன், இறைவியின் மூர்த்தங்களை எழுந்தருள செய்து தினம் தினம் கொண்டாடுவார்கள்.

சில வசந்த மண்டபங்கள் நீராழி மண்டபமாகவும் வடிவமைக்கப்பட்டிருக்கும். சுற்றிலும் நீரால் நிரப்பி மண்டப மையத்தில் உற்சவங்கள் நடைபெறும்.

லலிதோபாக்யம் என்னும் புனித நூலில் கண்டுள்ளப்படி, லலிதாம்பிகை தனது அம்சமாக 64 சக்திகளை யோகினியாக உருவாக்கினார்

இந்த 64 யோகினிகளும் நமது பிராத்தனைகளை அம்பிகையிடம் எடுத்துச் செல்லும் இறை தூதர்களாக நம்பப்படுகிகின்றனர். இந்த நன்னாளில் அம்பிகையை ஆராதித்து, அனைவரும் நல்வாழ்வினை பெறுவோம்.



~ ரா. பன்னீர்செல்வம்

# தோரண மலை

இன்றைய நவீன யுகத்தில் மருத்துவமனைகள் பெருகிவிட்டன. உடலில் சாதாரண தலைவலி, காய்ச்சல் என்று போனால் கூட எக்ஸ்ரே, ஸ்கேன், பரிசோதனைகள் என பலவகை மருத்துவக்கூறுகள் மக்களை பயமுறுத்துகின்றன.

நவீன உபகாரணங்களோடு அறுவை சிகிச்சை என்பது சாதாரண நடைமுறையில் பெருகிவிட்டது புதிது புதிதாய் நோய்களும் அவற்றை ஆராய்ந்து சரியான மருந்து கண்டுபிடிக்க ஆய்வுக் கூடங்களும் பெருகிவிட்டன. இன்றைய விஞ்ஞான யுகத்தில், வளர்ந்து வரும் தொழில் நுட்பத்தில் இதெல்லாமே சாத்தியம் தான்

என்றாலும் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் இப்படிப்பட்ட மருந்து ஆராய்ச்சிகளும் அறுவை சிகிச்சையும் சாத்தியமா?

சாத்தியமே என்று நிரூபித்திருக்கிறார்கள் நம் சித்தர் பெருமக்கள்! அந்த மருத்துவ முறையைத் தான் சித்த மருத்துவம் என்று இன்று உலகமே கொண்டாடுகிறது!



"ஆயிரம் படுக்கைகள், ஆபரேஷன் தியேட்டர்" என அன்றே சாதனை புரிந்திருக்கிறார்கள், சித்தர்கள்!

**"உலகின் முதல் அறுவை சிகிச்சை"**

தமிழகத்தின் தென் பகுதியில் அம்பாசமுத்திரம் அருகில் உள்ளது தோரண மலை! இதன் உச்சியில் முருகன் ஆலயம் அமைந்துள்ளது!

இந்த முருகப் பெருமானை பிரதிஷ்டை செய்து வழிபட்டு வந்தவர், முதன்மைச் சித்தரான அகத்திய மாமுனிவர்!

உலகம் சமநிலை பெற தென் பகுதிக்கு வந்த அகத்தியர், பொதிகை மலையில் தங்கி தமிழ் வளர்த்தார் என்பதை அறிவோம். பொதிகை மலை என்று எந்த மலையும் இல்லை.

தென் மேற்கு மலைத் தொடரில் அகத்தியர் உலவிய மலைப் பகுதியே பொதிகை மலை என்று போற்றப்படுகிறது.

இந்த மலைத்தொடரில் இடம் பெற்றதே இந்தத் தோரண மலை, யானை படுத்திருப்பது போன்ற தோற்றத்தில் இந்த மலை இருப்பதால் வாரண மலை எனப் பெயர் பெற்றது.

காலப் போக்கில் மருவி, தோரண மலை என்ற பெயருடன் விளங்குகின்றது.

இந்த மலையில் அகத்தியர், போகர் போன்ற சித்தர்கள் மூலிகை ஆராய்ச்சி மற்றும் மருத்துவ சிகிச்சை என சித்த மருத்துவ முறையை செயல்படுத்தும் விதமாக நூற்றுக்கணக்கான சீடர்களுக்கு மருத்துவ பயிற்சி அளித்துள்ளனர்.

அந்த நேரத்தில் தான் ஆயிரக்கணக்கான மாணவ சீடர்கள் சித்த மருத்துவத்தில் பயிற்சி பெற்று, மூலிகைகளின் தன்மைகளை அறிந்து பல பிரிவுகளாக தேர்ச்சிப் பெற்று, நாடு முழுவதும் சென்று சித்த மருத்துவம் செய்து மக்களின் நோய்களை தீர்த்தனர்.

இப்படி, உடற்பிணி தீர்க்கும் உன்னத மருத்துவமனையாக- சிறந்த பயிற்சி மையமாக விளங்கியுள்ளது இந்த தோரண மலை!

இங்குதான் பூவுலகில் முதன்முறையாக, கபாலத்தை திறந்து அறுவை சிகிச்சை மூலம் நோய் தீர்த்த அதிசயம் நிகழ்ந்துள்ளது.



ஒரு சமயம், ஒரு மன்னன், பல காலமாக தனக்கு தலைவலி தீராமல் இருந்ததால், பல வைத்தியரிடம் சிகிச்சை மேற்கொண்டும் பலன் அளிக்காமல் இறுதியாக, இந்த தோரண மலைக்கு வந்து போகரிடம் தனது தலைவலி பற்றி சொல்ல, அவரது மூளையில் தான் பிரச்சினை என அறிந்த போகர், அகத்தியர் முன்னிலையில் சிகிச்சை மேற்கொண்டார்.

ஒரு மூலிகை கொண்டு தலையில் கீற, கபாலம் பிளந்துள்ளது உள்ளே பார்த்த போகரும் அகத்தியரும் திகைத்தனர்.

மன்னனின் மூளையில் ஒரு தேரை நன்கு பற்றியபடி இருந்தது. இதுதான் அவரது தலைவலிக்கு காரணம் என்பதை அறிந்தனர்.

அந்த தேரையினை எடுத்தால், மன்னனின் மூளைப்பகுதி பாதிக்கப்பட்டு பித்து பிடிக்கும் நிலையே ஏற்படும் தேரையை மூளையை விட்டு அகற்றுவது எப்படி என குழம்பினர்.

போகரின் சீடன் ஒருவன் தேரையை மூளைக்கு எந்த சேதாரமும் இல்லாமல் நான் அகற்றுகிறேன் என்று முன் வந்தான்!

அகத்தியரும் போகரும் அனுமதி வழங்கியவுடன், மன்னரின் திறந்து கிடந்த மண்டைக்கருகிலே ஒரு மண் சட்டியில் தண்ணீரைக் கொண்டு வந்து வைத்து, கைகளால் நீரை அலம்பினான்!

தண்ணீர் அலை மோதும் சப்தத்தைக் கேட்ட தேரை ஒரே தாவாக தாவி, சட்டியில் இருந்த தண்ணீரில் குதித்தது!

உடனே போகர் மூலிகை கொண்டு மன்னரின் கபாலத்தை மூடினார். மூளைக்கு எந்த சேதமும் ஏற்படாமல் அறுவை சிகிச்சை நடந்தேறியது.

அந்த சீடனின் நுண்ணறிவை அகத்தியரும் போகரும் பாராட்டி, சீடனுக்கு தேரையர் என்னும் பெயரை வைத்தனர்!




இது தேரையச் சித்தரின் வரலாறாகவும் போற்றப் படுகிறது. அகத்தியர், போகர், தேரையர் போன்ற சித்த புருஷர்களின் பாதம் பட்ட இந்த தோரண மலையில் பல குகைகள் இருந்ததாகவும் அந்த குகைகளில் ஆயிரம் படுக்கை வசதிகள் கொண்ட சித்த மருத்துவமனை செயல்பட்டதாகவும் குறிப்புக்கள் உள்ளன.

மேலும், மலைப் பகுதியில் பல இடங்களில் மூலிகைகளை அரைக்கவும், பொடி செய்யவும் சித்தர்கள் பயன்படுத்திய குழிகள் இன்றளவும் காணபடுகின்றன.

நாட்டிற்கே பிணி தீர்க்கும் மருத்துவ மையமாக - ஆராய்ச்சிக் கூடமாக விளங்கியது இந்த தோரண மலை!

மருத்துவம் பயில்வோர் மருத்துவர்கள் என பலரும் இந்த முருகனை வணங்கி தங்கள் சேவையை தொடங்குகின்றனர். அன்றைய மருத்துவப்பணியில், எல்லோரும் வழிபடும் பொருட்டு முருகனின் சிலையை அகத்தியர் பிரதிஷ்ட்டை செய்து வணங்கினார்

உலகின் முதல் மருத்துவமனை என புகழ்பெற்ற தோரண மலையில் உறைகின்ற முருகப் பெருமான் நாடி வருவோர்க்கு நல்லருள் புரிகின்றார்.

~ ரா. பன்னீர்செல்வம்



# இராமாயண சுருக்கம்

"வில்லது ஏந்தி வந்தாய்!
வன் பகை தன்னை வென்றாய்!
கல்லது பெண்ணாய்ச் செய்தாய்!
கனிந்ததோர் அன்பில் நின்றாய்!
வில்லது வளைத்து அங்கே
மிதிலையின் மகளை மணந்தாய்!
சொல்லது ஒன்றே யென்றாய்!
தந்தையின் வாக்கு ஏற்றாய்!
தம்பிக்கு தேசம் தந்தாய்!
தியாகமே உருவாயானாய்!
பஞ்சென பாதமமைந்த
நங்கையாம் சீதையுடனே
தம்பியாம் இலக்குவன் தொடர
கடுவனம் விரும்பிப் புகுந்தாய்!
ராவணன் கவர்ந்து சென்ற
பைந்தொடி சீதை தன்னை
அஞ்சனை புத்ரன் துணையால்
செரு வென்று மீட்டு வந்தாய்!
சிந்தையில் மகிழ்வு கொண்டு
அயோத்தி மீண்டு வந்து
பட்டத்து அரசனானாய்!
பார் புகழ் சீதாராமா!
பரிவுடை பரந்தாமா!
சீருடன் எம்மைக் காப்பாய்!
சிந்தையைத் தெளியச் செய்வாய்!
கார் பொழி வெள்ளம் போலக்
கருணையும் மிகுத்துத் தருவாய்!



தினந்தோறும் சுந்தரகாண்டம் படித்த பலனைத் தரும் 28 வரி ராமகதை!

~ தொகுத்து வழங்கியவர்
ஜானகி

# உள்ளமே உன்னத பெருங்கோயில்

கருணை உள்ளமே கடவுள் வாழும் இல்லம் என்று ஆன்றோர்கள் கூறுவர்! மனம் செம்மையானால் தான் இறையருளை உணர இயலும்!

"நெஞ்சகமே கோயில் நினைவே சுகந்தம் அன்பே மஞ்சன நீர் பூசை கொள்ள வாராய் பராபரமே" என்பது தாயுமானவர் அருளிய தத்துவமாகும். உள்ளத்தில் நல்ல உள்ளம் பிறருக்காக இறைவனை வேண்டும் இனிய உள்ளமே நல்ல உள்ளம்! "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம் வள்ளற் பிரானார்க்கு வாய் கோபுர வாசல் தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம் கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே" என்று மொழிகின்றார் திருமூலர். உள்ளம் மாசடைந்தால் மாசிலா மாமணியாம் சிவனருள் சித்திக்காது. உள்ளத்தை புனிதப்படுத்துவது எங்ஙனம்? தயவு நெறியாம் உயிர் இரக்கமே நல்ல உள்ள வாசலின் உயரிய திறவு கோல்! உயிர்களிடத்தில் அன்பு காட்டுதலும், இமைப் பொழுதும் ஈசன் கருணையைப் போற்றுவதும் அறத்தான் வருவதே இன்பம் எனக் கொண்டு ஒழுகுதலும், மனதாலும் தீங்கு இழைக்காத தகைமையும், பக்தி நெறியிற் செல்லுதலும், இல்லறக் கடமைகள் மட்டுமின்றி நல்லற கடமைகளை நாளும் கொண்டு திகழும் உள்ளமே மதிப்புறு உள்ளம். இன்பமும் இன்பம் இல்லை. துன்பமும் துன்பம் இல்லை. இன்ப துன்பங்கள் எல்லாம் மனதை பொறுத்த விஷயங்கள்.



மனமே முருகனின் மயில் வாகனம் என்ற பாடல் ஒன்று உண்டு. நல்ல மனமே நல்ல பலன்களைப் பெறும். தீய மனமோ தீய பலன்களையே பெறும்.

உடலை தூய்மைப்படுத்துவது உடல் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்தும்! உள்ளத்தை தூய்மைப்படுத்துவது இறையருளை பெற உதவும்!

மனதை பக்குவப்படுத்துவது சாதாரண விஷயம் அல்ல! மனம் ஒரு குரங்கு என்பார்கள் மனம் பொதுவாக அலைபாயும் இயல்பு உடையது. ஆபத்து காலங்களில் ஆமை தன் ஓட்டுக்குள் ஒடுக்கிக் கொண்டு விடும். தற்காத்துக் கொள்ளும் இயல்புடையது.

அதே ஆமை ஓட்டுக்குள் ஒடுக்கிக் கொண்டாலும் அனல் தகிக்கும் இடத்தில் கிடக்கும் போது தொடக்கத்தில் சுகமாக இருக்கும் சூடு ஏற ஏற வெந்து மடியும். ஆமை தன் ஓட்டுக்குள் ஒடுக்கிக் கொள்வதை போன்று மனிதர்கள் புலனடக்கத்தை கொண்டு இறை சிந்தனைகளிலிருந்து மாறுபடாமல் மனம் மொழி மெய் ஒன்றுபட பரம் பொருளோடு ஒன்றி இருப்பதே உயர்வு!

"மனமது செம்மையானால் மந்திரம் செபிக்க வேண்டாம்" என்பது அகத்தியரின் அமுத வாக்காகும். மணமக்களை வாழ்த்தும் பெரியோர் "மனம் போல் வாழ்க" என்று வாழ்த்துவர். நல்ல மனம் வாழ்க! என்று சர்வேஸ்வரனும் நம்மை வாழ்த்தி மகிழ்வான்.

எழுதியவர்
சைவ சித்தாந்த செம்மல்
கவிஞர் சீனு செந்தாமரை
கடலூர்

# மூலிகை ரகசியம்

## கருந்தகரை

நமது மூலிகை ரகசியம் பகுதியில் நாம் காணவிருப்பது கருந்தகரை என்னும் மூலிகையாகும். தகரை என்ற பெயரில் காணப்படும் இது, சற்று கருப்பு நிற இலைகளுடன் இருப்பதே கருந்தகரை என அழைக்கப்படுகிறது.

செடி வகையை சேர்ந்த இத்தாவரம் சுமார் 7 அடி வரை வளரக்கூடியது. அதிக கிளைகள் விடாமல் ஒரு சில கிளைகளே இருக்கும்.

ஆற்றங்கரை, வயல்வெளி, அடர்ந்த காடு என செழுமையான பகுதியில் வளரும் இந்த தாவரம் கருந்தகரை, வெந்தகரை, செந்தகரை என பல வகைகளில் காணப்படுகிறது.

கண்கவரும் மஞ்சள் நிற பூக்கள் இதன் அடையாளம்! ஆவாரை, கொன்றை போன்று பூக்கள் காணப்படும்.

இதன் பூக்கள் மற்றும் இலைகளில் உண்டாகும் துர் மணம் முகம் சுளிக்க வைக்கும்.

### குணவிக்கும் நோய்கள்:

சிறுநீரக அலர்ஜி, சிறுநீரக கற்கள், தோலில் உண்டாகும் அலர்ஜி, நுரையீரல் பிரச்சினை போன்ற பல பிரச்சினைகளுக்கு மருந்தாகிறது இந்த தகரை என்னும் மூலிகை



### பயன்படுத்தும் முறை:

இதன் இலைகளையும் பூக்களையும் உணவாக சமைத்து பயன்படுத்தலாம். ஆனால், இதன் மணம் சற்றே மாறுபட்டிருப்பதால் சமையலில் யாரும் பயன்படுத்துவதில்லை.

இதன் விதைகள் ஒருசில நாடுகளில் காபிக்கொட்டைக்கு பதிலாக பயன்படுத்தப் படுகிறது.

தகரை இலைகள் பத்தும் சிறிதளவு சிறுகண் பீளையும் எடுத்து அரைத்து பாலில் கலந்து வெறும் வயிற்றில் 3 நாட்கள் சாப்பிட்டால் சிறுநீரக கல் கரையும்.

கைப்பிடி அளவு தகரை இலைகளை எடுத்து ஒரு லிட்டர் தண்ணீரில் கொதிக்க வைத்து கால் லிட்டராக்கி குடித்தால் சிறுநீரக பிரச்சினைகள் அகலும்.


இதன் வேரை அரைத்து பூசுவதன் மூலம் தோல் அலர்ஜி, மூட்டு வலி, கீல் வாதம் ஆகியவை குணமாகும்.

இப்படி பல நோய்களுக்கு மருந்தாகும் இந்த கருந்தகரை என்னும் மூலிகையை பயன்படுத்தி நலமுடன் வாழலாம்.

~ ரா. பன்னீர்செல்வம்


# ஏப்ரல் 16 – 30 ராசி பலன்

~ ஆஸ்ட்ரோவேட் ஜோதிடர் மு. செந்தில் நாதன்




## மேஷம்

- வியாபாரத்தில் தன வரவு அதிகரிக்கும். பொருளாதார நிலையில் முன்னேற்றம் இருக்கும்.
- குடும்பத்தில் அமைதியும் நல்லிணக்கமும் இருக்கும்.
- பள்ளியில் பயிலும் மாணவர்கள் கவனச் சிதறல் போன்ற தடைகளையும் தாண்டி கல்வியில் முன்னேறுவார்கள்.
- உயர்கல்வி பயிலும் மாணவர்கள் பல புதிய விஷயங்களை கற்றுக் கொள்வார்கள்.
- தொழில் செய்பவர்கள் தங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள புதிய தொழிலைத் தொடங்குவது ஏற்றத்தை கொடுக்கும்.
- ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். ஆன்மீகத்திற்காக பயணம் மேற்கொள்வீர்கள்.
- உடல் ஆரோக்கியம் மேம்படும்.
- வயதானவர்களின் உடல் நிலையில் சிறிது கவனம் தேவை.
- பொறியியல் படிக்கும் மாணவர்கள் சிறந்த முறையில் தேர்வுகளை எழுதி சிறந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள்.
- உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு மற்றும் தன நிலையில் ஏற்றம் ஏற்படும்.
- கூட்டுத்தொழிலிலில் நல்ல லாபம் கிடைக்கும்.
- காதல் உறவில் மனஸ்தாபங்கள் உண்டாகலாம். கவனம் தேவை.
- திருமணமான தம்பதிகளுக்கு இடையே இணக்கம் அதிகரிக்கும்.



# ரிஷபம்

- சுயதொழிலில் ஏற்றம் ஏற்படும். அதிக லாபங்களை எதிர்பார்க்கலாம்.
- கூட்டுத் தொழில் செய்பவர்களுக்கு லாபம் அதிகரிக்கும்.
- உத்தியோகம் குறித்த முக்கிய முடிவுகளை எடுக்கும் முன்பு அதன் நன்மை தீமைகளை ஆராய்ந்து முடிவு எடுங்கள்.
- திருமணமான தம்பதிகள் இடையே சுமுகமான உறவு இருக்கும்.
- மாணவர்கள் கவனச் சிதறலுக்கு ஆட்படுவார்கள். படிப்பில் கவனம் தேவை.
- ஆராய்ச்சி படிப்பு படிக்கும் மாணவர்கள் படிப்பில் வெற்றி பெறுவார்கள்.
- உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. சிறுநீரகம் சம்மந்தப்பட்ட உடல்நல பாதிப்பு ஏற்படலாம். போதுமான நீர் உட்கொண்டு இந்த பாதிப்பிலிருந்து தப்பிக்கலாம்.
- திருமணமான தம்பதிகளின் தாம்பத்திய வாழ்வு சிறக்கும்.
- உறவினர்கள், நண்பர்கள் என அனைவரிடமும் நல்ல சுமுகமான உறவு நிலை இருக்கும்.
- இந்த மாதம் உங்கள் பணப்புழக்கம் அதிகரிக்கும். செலவுகள் கட்டுக்குள் இருக்கும்.



# மிதுனம்

- உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும்.
- பணியிடத்தில் அதிகாரிகளால் பாராட்டப் படுவீர்கள். பணியிடச் சூழல் உங்களுக்கு அனுகூலமாக இருக்கும்.
- புதிய நண்பர்கள் கிடைப்பார்கள்.
- பொருளாதார நிலையும் சிறப்பாக இருக்கும்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.
- காதலில் வெற்றி கிடைக்கும்.
- திருமணமான தம்பதியர் மனமொத்து வாழ்வார்கள். இருவருக்கும் இடையே அன்னியோன்யம் கூடும்.
- பொருளாதார நிலை ஏற்றம் காணும் வகையில் கிரக நிலைகள் உள்ளன.
- சுயதொழிலில் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம்.
- கூட்டுத்தொழிலில் அதிக லாபங்களை எதிர்பார்க்க முடியாது.
- பங்கு வர்த்தகத்தில் ஏற்றம் கிடைக்கும்.
- மாணவர்களின் கிரகிக்கும் திறன் கூடும். கல்வியில் வெற்றி பெறுவார்கள்.
- உப்புசம் மற்றும் வயிறு சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் வரலாம். உடல் நலனில் கவனம் தேவை.




# கடகம்

- சுயதொழில் செய்பவர்களுக்கு லாபம் கிடைக்கும். .
- உத்தியோகத்தில் அதிக பணிச் சுமை இருந்த போதிலும் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.
- பணியிடத்தில் புதிய பொறுப்புக்கள் வழங்கப்படும். உங்கள் செயல் திறன் மேல்லதிகாரிகளால் பாராட்டப்படும்.
- குடும்பத்தில் சில சிறு சிறு பிரச்சினைகள் இருந்தாலும் கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும்.
- வீட்டுத் தேவைக்கான செலவுகள் அதிகரிக்கும். இந்த மாதம் நீங்கள் கடினமான முயற்சிகள் எடுப்பதன் மூலம் உங்கள் வருமானத்தை உயர்த்திக் கொள்ள இயலும்.
- உயர்கல்வி பயிலும் மாணவர்கள் பொறுமையுடன் கடினமாக உழைத்துப் படித்தால் வெற்றி நிச்சயம்.
- உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். அதனை தக்க வைத்துக் கொள்ள நீங்கள் உடற் பயிற்சி மற்றும் தியானம் போன்றவற்றை மேற்கொள்ளுங்கள்.
- உங்கள் வாழ்க்கைத் துணையின் அன்பைப் பெறுவீர்கள். இந்த மாதம் உங்கள் உறவு மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும்.
- குடும்ப உறவினர்களுடன் நல்லுறவு நீடிக்கும்.
- நிதிநிலையைப் பொறுத்தவரை இந்த மாதம் உங்களுக்கு அதிர்ஷ்டகரமான மாதமாக இருக்கும்.



# சிம்மம்

- சுயதொழில் செய்பவர்கள் தங்கள் இலக்குகளை அடைய அதிக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் மேலதிகாரிகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் சிறப்பாக பணியாற்றுவீர்கள்.
- திருமணத்திற்குக் காத்திருப்பவர்களுக்கு தக்க துணை கிடைக்க உகந்த மாதம் ஆகும்.
- திருமணமான தம்பதிகள் இடையே ஒற்றுமை இருக்கும்.
- இந்த மாதம் தங்களின் பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். வருமானம் உயரக் காண்பீர்கள்.
- மாணவர்களுக்கு இந்த மாதம் சிறந்த மாதமாக இருக்கும். படிப்பில் வெற்றி கிடைக்கும்.
- உங்கள் ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. தினமும் உடற்பயிற்சி செய்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் பாதுகாத்துக் கொள்ள இயலும்.
- குடும்பத்தில் அமைதி நிலவ வாக்கு வாதத்தை தவிர்க்க வேண்டும்.
- விட்டுக் கொடுத்து செல்வதன் மூலம் கணவன் மனைவி உறவில் நெருக்கம் அதிகரிக்கும்.
- சொத்து அல்லது உயில் சம்பந்தமான சட்டச் சிக்கல்கள் ஏதேனும் இருந்தால் அவை இந்த மாதம் உங்களுக்கு சாதகமான பலன்களைத் தரும்.



# கன்னி

- உத்தியோகத்தை பொருத்தவரை பணிச்சுமை அதிகரித்து காணப்படும்.
- படைப்புத் துறையில் இருப்பவர்கள் தங்கள் துறையில் படைப்பாற்றல் மற்றும் புத்திசாலித்தனத்தின் மூலம் சாதிப்பார்கள்.
- பொருளாதாரத்தைப் பொருத்தவரை இந்த மாதம் அனுகூலமான நிலை இருக்கும்.
- செலவுகள் அதிகரித்து காணப்படும். தேவையில்லாத செலவுகளை குறைத்துக் கொள்ள வேண்டும்.
- நீங்கள் அனுசரித்துச் செல்வதன் மூலம் குடும்ப உறவுகள் சீராகவும் அமைதியாகவும் இருக்கும்.
- சுயதொழில் செய்பவர்கள் சிறந்த தொழில் வாய்ப்புகளைப் பெறுவார்கள். வியாபாரத்தில் வெற்றி கிடைக்கும்.
- உத்தியோகத்தைப் பொருத்தவரை கடினமாக உழைத்தாலும் அதற்குரிய பலன் கிடைப்பது அரிதாக இருக்கும்.
- இந்த மாதத்தின் பிற்பகுதியில் பண விஷயங்கள் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படும்.
- ஸ்திரமான நிதிநிலை இருக்கும். பெரிய அளவில் நஷ்டங்கள் ஏதும் ஏற்படாது என்பது உங்களுக்கு ஆறுதலான விஷயமாக இருக்கும். உங்கள் சேமிப்பைக் கொண்டு உங்கள் செலவுகளை சமாளித்துக் கொள்வீர்கள்.




# துலாம்

- அரசு தொழில் புரிபவர்கள் மேல் அதிகாரிகளுடன் கருத்து வேறுபாடு ஏற்படுவதற்கு வாய்ப்புகள் உள்ளது. வாக்குவாத்தை தவிர்ப்பது நன்மை பயக்கும்.
- நீங்கள் ஆடை மற்றும் உணவுத் துறையில் பணிபுரிபவர் என்றால் உத்தியோகத்தில் உயர்வு உண்டு.
- வங்கித் துறை, கல்வித்துறை, ஊடகத் துறை மற்றும் பொழுதுபோக்குத் துறையில் இருக்கும் தொழில் வல்லுனர்கள் இந்த மாதம் தங்கள் தொழிலில் பிரகாசிப்பார்கள்.
- சுயதொழில் மற்றும் வியாபாரம் செய்பவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். தொழிலில் அதிக லாபத்தை எதிர்பார்க்கலாம்.
- உங்கள் கடந்த கால முதலீடுகளின் மூலம் நீங்கள் லாபம் பெறுவீர்கள். உங்கள் பணப்புழக்கம் கணிசமாக அதிகரிக்கும்.
- இந்த மாதம் புதிய முதலீடுகளை தவிர்ப்பது நல்லது..
- மாணவர்களின் கிரகிக்கும் திறன் கூடும். படிப்பில் வெற்றி கிடைக்கும்.
- திருமணம் சம்மந்தப்பட்ட முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.
- குடும்பத்தில் உள்ளவர்களிடம் நல்லிணக்கம் கூடும்.
- பங்கு வர்த்தகத்தில் அதிக லாபங்களை எதிர்பார்க்கலாம்.
- அஜீரணம் சம்பந்தமான உடல் உபாதைகள் வருவதற்கு வாய்ப்பு உள்ளது என்பதால் உண்ணும் உணவில் கவனம் தேவை.



# விருச்சிகம்

- உத்தியோகத்தில் அங்கீகாரம் பெற சிறிது கடினமாக உழைக்க வேண்டியிருக்கும்.
- வியாபாரம் செய்பவர்கள் தங்கள் விற்பனை அதிகரிக்கக் காண்பார்கள்.
- நிதிநிலையைப் பொறுத்தவரை பண வரவு குறைவாக இருக்கும். பெரிய அளவில் லாபம் எதுவும் இருக்காது.
- திருமணமான தம்பதிகள் தங்கள் வாழ்க்கைத் துணைக்கென நேரம் ஒதுக்க இயலாத காரணத்தால் உறவில் அதிருப்தியும் மகிழ்ச்சியின்மையும் இருக்கும்.
- உங்கள் ஆரோக்கியம் குறித்த செலவுகள் எழும் என்பதால் அதற்கு சிறிது பணத்தை நீங்கள் ஒதுக்கி வைத்துக் கொள்ள வேண்டும்.
- மாணவர்கள் படிப்பில் விடா முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.
- உங்கள் தாய் வழி உறவினர்களிடம் சில கருத்து வேறுபாடுகள் ஏற்படும்.
- இந்த மாதம் பணப்புழக்கம் சுமாராக இருக்கும். எழுத்துத் துறை, மற்றும் கலைத் துறையில் இருப்பவர்கள் சிறந்த வகையில் வருமானம் ஈட்டுவார்கள்.
- வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டிருப்பவர்களும் கணிசமான வருமானம் காண்பார்கள்.
- உங்கள் பொருளாதார நிலை சுமாராக இருக்கும்.
- இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் சீராக இருக்க வாய்ப்பில்லை. எனவே உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




# தனுசு

- உத்தியோகத்தில் பதவி உயர்வை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருப்பவர்களுக்கு பதவி உயர்வு கிடைக்கும்.
- பணியிடத்தில் மேலதிகாரிகள் உங்களுக்கு உரிய அங்கீகாரம் வழங்குவார்கள்.
- கூட்டுத் தொழில் உங்களுக்கு லாபத்தை அளிக்கும்.
- தொழில் ஒப்பந்தம் சார்ந்த ஆவணங்களில் கையொப்பமிடுமுன் கவனம் தேவை.
- வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் உங்களை நாடி வரும். அதன் மூலம் நீங்கள் ஆதாயமும் வெற்றியும் பெறுவீர்கள்.
- மாணவர்களுக்கு இது சிறந்த மாதமாக இருக்கும். மாணவர்கள் கவனமுடன் படிப்பார்கள். சில தடைகள் இருந்தாலும் இந்த மாத இடைப் பகுதியில் மீண்டும் பிரகாசிக்க வாய்ப்பு உண்டு.
- பங்கு வர்த்தகத்தில் முக்கியமான முடிவுகள் எதையும் இந்த மாதம் எடுக்காதீர்கள். ஏனெனில் அதில் நஷ்டம் ஏற்பட வாய்ப்புள்ளது.
- உங்கள் ஆரோக்கியம் இந்த மாதம் சிறப்பாக இருக்கும் என்றாலும் மனதில் சிறிது பதட்ட நிலை இருக்கும். உணவு முறையில் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.



# மகரம்

- கணவன் மனைவி உறவு சிறப்பாக இருக்கும் என்றாலும் சில கருத்து வேறுபாடுகள் காரணமாக வாக்குவாதங்கள் எழும்.
- உத்தியோகத்தில் உள்ளவர்கள் கடினமாக உழைப்பதன் மூலமும் சக பணியாளர்களிடம் நல்லுறவு பேணுவதன் மூலமும் பணியிடத்தில் நல்ல பெயரும் புகழும் பெறுவீர்கள். பணியிடத்தில் நீங்கள் உங்கள் பொறுப்புகளை சரிவர நிறைவேற்றுவீர்கள்.
- தகவல் தொடர்புத்துறை, மற்றும்  ஐடி போன்ற துறைகளில் வேலை செய்பவர்களுக்கு வேலை பளு கூடும்.
- வெளிநாட்டில் கல்வி பயில நினைக்கும் மாணவர்கள் சில தாமதங்களை சந்திக்க நேரும்.
- மாத மத்தியப் பகுதியில் குடும்ப உறுப்பினர்களுடன் சில கருத்து வேறுபாடுகள் ஏற்படும்.குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும்.
- வீடு மராமத்துப் பணி மற்றும் வீட்டிற்கு வெள்ளை அடித்தல் போன்ற வகையில் செலவுகளை மேற்கொள்வீர்கள்.
- ஒற்றை தலைவலி போன்ற உடல் உபாதைகள் ஏற்படும். சரியான நேர இடைவெளியில் உணவை உட்கொள்வது நன்மை பயக்கும்.



# கும்பம்

- நீங்கள் கடினமாக உழைப்பதன் மூலம் பணியிடத்தில் பெயரும் புகழும் பெறுவீர்கள். சக பணியாளர்கள் நட்புணர்வுடன் பழகுவார்கள்.
- இந்த மாதம் தொழிலில் சிறிது பதட்ட நிலை இருக்கும். வெளிநாட்டுத் தொடர்புடன் தொழில் செய்பவர்கள் இந்த மாதம் அதிக பண வரவைக் காண்பார்கள்.
- நீங்கள் உங்கள் துணையையும் அவரின் உணர்வுகளையும் புரிந்து நடந்து கொள்வதன் மூலம் நல்லுறவைப் பேண இயலும்.
- குடும்பத்தில் அன்பும் மகிழ்ச்சியும் நிலவும். குடும்பத்தில் உள்ள அனைவரிடமும் சுமுகமான உறவு காணப்படும்.
- நீங்கள் வாங்கிய கடனை திருப்பிச் செலுத்த இது ஏற்ற நேரமாக இருக்கும்.
- மாணவர்கள் மனதில் பதட்ட நிலை இருக்கும். மாணவர்கள் அதிக முயற்சியுடனும் கவனமுடனும் படிக்க வேண்டும். ஞாபகத் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும்.
- இந்த மாதம் உங்கள் ஆரோக்கியம் மேம்படும். என்றாலும் மனதில் காணப்படும் பதட்டம் காரணமாக இனம் புரியாத உடல் உபாதைகள் ஏற்படும். மிகப் பெரிய அளவிலான உடல் நல பாதிப்புகள் எதுவும் இருக்காது. யோகா மற்றும் தியானம் மேற்கொள்ளுவதன் மூலம் உங்கள் ஆரோக்கியத்தை நீங்கள் சீராக தக்க வைத்துக் கொள்ளலாம்.



# மீனம்

- தொழிலில் பெயரும் புகழும் பெறுவீர்கள். தொழில் தொடர்பான பயணங்கள் உங்களுக்கு நன்மை அளிக்கும்.
- திருமணமான தம்பதிகள் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்புள்ளதால் நீங்கள் கவனமாக இருக்க வேண்டும். உங்கள் வார்த்தைகளில் கவனம் தேவை. உணர்ச்சி வசப்படாமல் நிதானமாக செயல் பட வேண்டும்.
- கலை மற்றும் இசையில் உங்களுக்கு ஆர்வம் அதிகரிக்கும்.
- சென்ற மாதத்தை விட இந்த மாதம் பண வரவு சற்று அதிகமாக இருக்கும். என்றாலும் நீங்கள் கடன் வாங்கக்ககூடிய வாய்ப்பும் உள்ளது.
- மாணவர்கள் மனதில் இந்த மாதம் தன்னம்பிக்கை நிறைந்து இருக்கும். வெளி நாடு சென்று பயில விரும்பும் மாணவர்கள் தங்கள் விருப்பம் நிறைவேறக் காண்பார்கள்.
- கல்வி பயிலும் மாணவர்கள் விடாமுயற்சியுடன் செயல்பட்டு வெற்றி காண்பார்கள்.
- இந்த மாதம் முழுவதும் உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பெரிய அளவிலான பாதிப்புகள் ஏதும் இருக்க வாய்ப்பில்லை. தினமும் உடற்பயிற்சியை மேற்கொள்வதன் மூலம் சிறந்த உடல் ஆரோக்கியத்தை பேணிக்காக்க முடியும்.

அனைத்து ஜோதிட, புரோஹித மற்றும் ஆன்மிக சேவைகளுக்கு
தொடர்புகொள்ள: 88702 88701